# கலைகளில் வல்ல ஞானவித்தகன் முருகக் கடவுள்

## 1.முன்னுரை

கடவுளை வீரத்திற்கும், காதலுக்கும், தமிழுக்கும் மாத்திரமல்லாது கலைகளுடனும் பொருந்த நோக்குந் தன்மை புராணங்களிலும் இலக்கியங்களிலும் காலத்திற்கு காலம் வெளிப்பட்டுள்ளது. ஆதி சிவனின் மைந்தனான முருகக் கடவுளைக் கலைகளுடனும் இணைத்துப் பார்த்திருக்கும் தன்மையினை இலக்கியங்களில் இருந்து பகுப்பு முறைத் திறனாய்வாலும், வரலாற்று முறைத் திறனாய்வாலும், விளக்க முறைத் திறனாய்வாலும் வெளிக் கொணர்வதாகவே இக்கட்டுரை அமையவுள்ளது.

## 2. முருகக் கடவுளின் தோற்றமும் தனித் தன்மைகளும்

சைவ சமயத்தில் முருகக் கடவுளின் தோற்றமானது, சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பிளம்புகள் வெளிப்படவும், அவற்றைத் தாங்கிச் சென்ற வாயு பகவான் வெப்பம் தாங்க வொண்ணாமல் சரவணப் பொய்கையில் இட்டார் என்றும், அப் பொறிகளை எடுத்துக் கார்த்திகைப் பெண்கள் ஆறு குழந்தைகளக வளர்த்து வருகையில், அன்னை பார்வதி அக்குழந்தைகளை ஒன்றுசேர்த்து அணைத்திட, ஆறுமுகங்கள் கொண்ட ஆறுமுகனாகத் தோற்றம் பெற்றார் என்றும் கந்தபுராணத்தில் கூறப் படுகிறது. முருகன் ஆதி சிவனாரினதும் அன்னை பார்வதியினதும் புதல்வனாவார். முன்னை வினை நீக்கும் கடவுளாக, தேவர்களை அசுரரிடம் இருந்து மீட்க உருவாக்கப் பட்டவராக முருகப்பெருமான் பற்றி புராணங்கள் வாயிலாக அறியக்கிடக்கிறது. (15).

அசுரரைச் சமரில் வென்றதனால் முருகனுக்கு தெய்வேந்திரன் தன் மகளான தெய்வானையை ம**ணமுடித்து** வைத்தான்(முருகாற்றுப் படை. 6,175; பரிபாடல். 9.9, 58). அவ்வண்ணம் முருகக் கடவுள் வீரத்திற்கும் வெற்றிக்கும் உரிய கடவுளாக போற்றப்பட்டார். மேலும் கணங்களின் அதிபதியான தன் அண்ணன் கணபதியின் துணை கொண்டு, குறிஞ்சி நிலப்பெண்ணான குறமகள் வள்ளியினை, திணைப்புனத்தில் கண்டு காதல் கொண்டு கடிமணம் புரிந்தார். இதனால் இவர் அன்பின் ஐந்திணையின் ஒன்றான குறிஞ்சித் திணைக்கோர்

உதாரணமாகி, குறிஞ்சி நிலத்தின் கடவுளாகவும் (குறிஞ்சிக் கடவுள்) வணங்கப் பட்டார் . ஆதிகாலத்தில் இங்ஙனம் தனித்து இருந்த முருகன் வழிபாடு சைவத்துள் உட்கொள்ளப் பட்டு, பின்பு கௌமாரம் என்று வழங்கப் பட்டு வெகு பிற்காலத்தில் (ஆதி சங்கரர் காலத்தில்) இந்து சமயத்துடன் இணைக்கப் பட்டது. தமிழர்கள் முருகனை அதிகமாக வழிபட்டமையால் தமிழ்க் கடவுள் என்றும் அழைக்கப்பட்டார்.

முருகனுக்குச் சேயோன் என்பதற்கு ஒப்பான குமரா (மகன்) எனும் பெயரை வால்மீகி இராமாயணத்தில் முதல் முதலாகக் காணலாம். வால்மீகியே குமரனைக் கார்த்திகேயன், ஸ்கந்தன் எனவும் அழைக்கிறார். கிருத்திகையில் ஆறு கார்த்திகைப் பெண்கள் அவனை வளர்த்த கதையும், அவன் தேவசேனாதிபதியாகி இந்திரன் மகள் தேவசேனாவை மணந்த கதையும் மகாபாரதத்தில் வருகின்றன. கீதையில் கண்ணன் "சேனாதிபதியரில் நான் ஸ்கந்தன்" எனக் கந்தனின் பெருமையை எடுத்துரைக்கிறான். மகாபாரதம் சற்றேறக் குறைய கிமு 400 அளவில் எழுதப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. இராமாயணம், மகாபாரதம் ஆகிய
இரு இதிகாசங்களிலும் முருகக்கடவுளின் அவதாரச் சிறப்பும், வீரச் சிறப்பும் கூறப்பட்டிருக்கிறது. தொல்காப்பியத்தில் சேயோன் என அழைப்பதும், வால்மீகி இராமாயணத்தில் குமரா என அழைப்பதும் ஒத்துப் போவதால் இவ்விரண்டு நூல்களும் தொல்காப்பிய காலமான கிமு 300க்கு அருகே எழுதப்பட்டிருக்கலாம். முருகன், வேதங்களிலும் குறிப்பிடப்படும் கடவுள். ஸ்கந்தனுக்கான மந்திரங்களைச் சாம வேதம் கொண்டுள்ளது. சாம வேதத்தில் ஸ்கந்த, விசாகன் எனும் இரட்டைக் கடவுளருக்கான மந்திரங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவ் எடுகோள்கள் யாவும் முருகனின் தொன்மையைக் குறித்து நிற்கின்றன.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கமானது தமிழர் வழக்கம் என வகைப்படுத்தப்பட்டிருக்கையில், முருகனுக்குக்கு இரு மனைவியர் எப்படி அமைந்தனர் என்னும் கேள்விக்கு பலவிதமான ஆக்க பூர்வமான பதில்கள் முன் வைக்கப்படுள்ளன. மனிதனின் உடலானது ஒற்றை (தலை), இரட்டை உறுப்புக்களினால் (கைகள், கால்கள்) ஆனது. ஒற்றை உடல் உறுப்பானது நெற்றி (பிரமந்திரா), தொண்டை (ஆஞ்ஞை), மார்பு (விசுத்தி), தொப்பூள் (மணிப்பூரம்), ஆண், பெண் குறி (சுவாதிஷ்டானம்), பிட்டத்தின் மேல்

(மூலாதாரம்) ஆகும். இந்த ஆறு ஒற்றை உறுப்பினையும் ஒரு நேர்கோட்டால் இணைக்கும் மையக்கோடே சுழுமுனையாகும். வலப்புறம், இடப்புறமும் அமைந்த உறுப்புக்களை இயங்க வைப்பது இந்த சுழுமுனையாகும். வள்ளி, தெய்வானை ஆகிய இரு மனைவியரும் வலம் இடம் அமைந்த அவயங்களின் குறியீடாகக் கொள்ளப்படுகிறார்கள். இவை சுழுமுனை பற்றிய வேதாந்த இரகசியமாகவே கருதப்படுகிறது. மேலும் முருகக்கடவுள் அக்கினி ஒளி, ஆன்ம ஒளி, பர ஒளி என ஒளிமயமானவர் வலம் இடமாக அமைந்த நாத ஒளி, விந்து ஒளிகளின் (சூரிய-சந்திர) குறியீடே இரு மனைவியர் என சமய அறிஞரின் அறிவியல் ரீதியான பதில்களும் உண்டு.

ஆதி மனிதன் தனக்கு மேலான எல்லா இயற்கை சக்திகளையும் வணங்கிக் கொண்டான். வேட்டையாடுவதற்கும், மிருகங்களிடம் இருந்து தன்னை பலவிதமான ஆயுதங்களை கொண்டு பாதுகாத்தான். இயற்கையினை வணங்கிய மனிதன் காலப்போக்கில் தன் பாதுகாப்பிற்கு உதவிய ஆயுதங்களையும் கடவுளர்களுடன் இணைத்து வணங்கிக் கொண்டான். தவிரவும் கடவுளர்களை மனித உருவங்ளைப்போல் உருவாக்கியதுடன் கடவுளின் அபரித சக்தியினை, பன்முக ஆற்றலைக் காட்டும் பொருட்டு அவ்வுருவங்களுக்கு பல தலைகள் கரங்களைப் பொருத்திக்கொண்டான். கடவுளர்களின் தோற்றத்திற்கு இவ்விதமான உலகியல் சார்ந்த அறிவியல் விவாதங்களும் உண்டு

## 3. கலைகளின் தொடக்கமும் அதன் தொடர்ச்சியும்

ஆதிகாலத்தில் மனிதனால் பொருட்கள் செய்யப்பட்டதற்கான முதல் தடயங்கள் தெற்கு ஆபிரிக்கா, மேற்கு மத்திய தரைக்கடல், மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் அட்ரியாடி கடல், சைபீரியா (பைகால் ஏரி) இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் தொல்லாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தடயங்கள் கல் (பிளின்ட், obsidian), மரம், எலும்பு கருவிகளால் செய்யப்பட்ட ஒவியங்களாகும். கற்காலத்தில் (15,000 - 8000 கி.மு) கலைகள் தொடங்கப்பட்டதற்கான ஆதாரங்கள்கிடைக்கப் பெற்றதால் அதுவே கலையின் தொடக்ககாலமாக விளங்குகிறது எனலாம்.

தொல்பொருள் ஆய்வின் மூலம் சிந்துவெளி நாகரிகம் இருந்த காலத்திலிருந்து ஏழு துளைகள் கொண்ட புல்லாங்குழல், சில வகையான நரம்புகள் கொண்ட இசைக்கருவிகள் பெறப்பட்டிருக்கின்றன. தவிரவும் கழுத்தில் தவில் கட்டப்பட்டுள்ள களிமண்ணினால் செய்யப்பட்ட ஆண் உருவம் ஒன்றும், வெண்கலத்தால் செயப்பட்ட நடன மாதின் வடிவம் ஒன்றும் கிடைத்துள்ளது. சில கற்சிலைகள் நடன முறையில் காணப்படுகின்றன. இரண்டு முத்திரைகளில் மிருதங்கம் போன்ற தோற்கருவிகள் பொறிக்கப்படுள்ளன. இக்காலத்தில் பாகவதர் கைகளில் வைத்து தாளமிடும் கருவிகள் போன்றவையும் கிடைத்துள்ளன. தற்கால வழக்கில் உள்ள வீணை போல ஓவியமொன்றும் தீட்டப்படுள்ளது. மேலும் சிந்து வெளியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட நகரங்களில் சிந்துவெளி நாகரிகத்தின் சிக்கல் தன்மை வாய்ந்த உயர்நிலை நகர் சார்ந்த பண்பாடு இருந்தது. நகரங்களில் கற்பனையும், அழகும், தொழில் நுட்பமும் பொருந்திய கட்டிடங்கள் காணப்பட்டன. இவை அன்றைய மனிதனின் கலைப்பண்பாட்டு வளர்ச்சியை புலப்படுத்துகிறது.

தமிழகத்தின் பழங்குகைகளிலும் பாறைகளிலும் 4000 வருடங்களுக்குமுற்பட்ட ஓவியங்கள் (30 இடங்களில்) காணப்படுகின்றன. இவை பழங்கற்கால, புதிய கற்கால ஓவியங்களென அடையாளம் கண்டுள்ளனர். தமிழகத்தின் ஆரம்ப கால வரலாற்றினை அறிவதற்கு அகழ்வாய்வுகளும் சங்க நூல்களும் உதவுகின்றன.

**கலைகளின் வடிவஙகள்**

மொழியின் பேச்சு வடிவமும் எழுத்து வடிவமும் இயலாகும், பண் இசைத்து பாடுவது இசையாகும். நடித்துக்காட்டுவது நாடகமாகும். பழந்தமிழானது நாடகத்தை கூத்து எனக் கூறுகிறது. பண்ணிசைக்கேற்ப கால்களை நகர்த்தி ஆடும் ஆட்டமே கூத்தாகும், ஒரு கதையின் நிகழ்வை காட்டும் தொடர் கூத்தானது நாடகமாகும். இக்கலைகளில் வல்லவராக கூத்தர், பாணர், பொருநர், விரலியர் ஆகிய கலைஞர்கள் திகழ்ந்தனர். இக்கலைஞர்கள் பற்றி தொல்காப்பியம் (அண்ணளவான காலம் 700 கி.மு) கூறுகின்றது.

எந்த ஒரு செயற்பாட்டினையும் இவைதான் கலை இவை கலை அல்ல என்று வரையறுத்திட முடியாது. கற்றுக் கொள்ளகூடிய, கற்றுக் கொடுக்கக்கூடிய

எல்லா செயற்பாடுகளும் கலையெனக் கொள்ளலாம். உடல் உளத் திறன்களை ஒருங்கிணைத்து கற்பனை வளத்தை ஊக்குவிப்பது கலையாகும், கலையானது கலைகளின் தன்மை பொறுத்து கவின்கலை, தொழில்நுட்பக்கலை என இரு வகையாகப் பிரிக்கப்படுகிறது. உணர்ச்சிக்கும், கற்பனைக்கும் முக்கியத்துவம் தரும் அரங்காடல் கலை, எழுத்துக் கலை, கட்புலக் கலை என்பன கவின் கலைக்குள் அடங்கும். முருகக் கடவுளுடன் பொருந்தி பார்க்கப்பட்டிருக்கும் கலைகள் கவின் கலைகளாகும். இதற்கான ஆதாரங்களை கீழ்வரும் பகுதிகளில் எடுத்துரைக்க விழைகிறேன்.

## கலைகளின் கடவுளாக முருகன்

சங்க நூல்களில் முதலில் வைத்து எண்ணப்படுவது பத்துப்பாட்டு நூல்களாகும். அத்தொகுப்பில் முதலில் இடம் பெறும் நூல் திருமுருகாற்றுப்படை.பன்னிரு திருமுறையில் இது பதினொராவது திருமுறையாக சேர்க்கப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையானது பாட்டுடைத்தலைவனாம் முருகனை சார்ந்து இயற்றப் பட்டது. வீடு பேற்றினை பெறுவதற்கு பக்குவமடைந்த ஒருவரை வீடு பேற்றினை பெற்றுக்கொண்ட பிறிதொருவர் வழிப்படுத்துவது ஆற்றுப் படுத்துதல் எனப் பொருள்படும். இந் நூலானது 317 அடிகளைக் கொண்ட அகவல்பாவினால் (ஆசிரியப்பாவினால்) ஆக்கப்பட்டுள்ளது. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் இதை இயற்றினார், இதன் காலம் கி.பி 3ம் நூற்றாண்டு முற்பட்ட காலம் எனக் கொள்வர். இந் நூலில்,

"கச்சினன் கழலலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோடன் குரும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்
கொடியன் நெடியன் தொடி அணி தோளன்" ( பாடல் 208-211 )

"மென்தோள் பல்பிணை தழீஇ. தலத்தந்து,
குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே. அதா அன்று," ( பாடல் 217)

என்னும் பாடல்களில் முருகனின் ஆடற்றிறன் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே வர்ணிக்கப் படுகிறது.

இப்பாடல்கள் அமையப் பெற்ற அத்தியாயத்தின் தலைப்பினை `குன்றுதொறு ஆடல்` என்று குறிப்பிடப் பட்டு, முருகன் குன்றுகளின் மீது ஆடியவன் என்றுணர்த்தி, ஆடற்கலையுடன் அவனுக்கிருந்த தொடர்பைத் துல்லியமாகத் துலங்க வைக்கிறார் பாடல் ஆசிரியரான நக்கீரனார்.
பாடல் வரிகளில், இடையில் கச்சையும் காலில் வீரக் கழலும் அணிந்தவன், சிவந்த வெட்சி மலரை தலையில் மாலையாகச் சூடியவன், புல்லாங்குழலினை, ஊது கொம்பினை, பல இசைக் கருவிகளையும் உடையவன், ஆட்டுக் கடாவினை - வாகனமாக உடையவன், மயிலை-ஊர்தியாக உடையவன், குற்றமற்ற சேவலைக் கொடியாகக் கொண்டவன், உயரமானவன், தொடி அணி அணியப் பெற்ற தோளை உடையவன், இங்கே இசைக்க வல்ல கருவிகளை உடையவனாக முருகன் பாடப் பெற்றிருக்கின்றான். மெல்லிய தோள்களையுடைய பெண்களுடன் மான் பிணை போன்று முதற்கை கொடுத்து மலைகள் தோறும் ஆடுவது முருகனின் நித்திய குணம் என்றும் பாடப்பட்டிருக்கிறது.

தந்தையாம் கூத்தபிரானைப் போல் தனையன் குமரன் ஆடிய கூத்துக்கள் பலவாம். குடைக்கூத்து, துடிக்கூத்து, குரவைக்கூத்து ருப்பதனையும், வெறிக்கூத்து, வள்ளிக்கூத்து என்பவயாம், சங்கஇலக்கியங்கள், பஞ்சமரபு, கூத்தநூல், சிலப்பதிகாரம், போன்ற பல நூல்களில் கூத்துகள் அலஙகரித்திருப்பதனைக் காணலாம். இங்கு குறிப்பிட்ட பஞ்சமரபு என்னும் நூல், அறிவனார் என்பவரால் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. இந்நூல் இசை மரபு, வாச்சிய மரபு, தாள மரபு, நிருத்த மரபு, அவிநய மரபு, என ஐவகை மரபுகளக் கூறுகின்றன.

"அரிய திருத்தாண் டவம்நித்த நாட்டியம்
குரவைவரி கோலம்வகை கூத்தேழ் - பரவுமிது
சாந்தி விநோதம் வகைக்கூத் தெனமூன்றா
ஓர்த்துணர்ந்தோ ராய்ந்த வுரை."

மேல் வரும் நிருத்தமரபு பாடல் 24 இல் ஏழுவகை நிருத்தங்கள் கூறப்பட்டிருக்கிறது. மேலும் உரையில் வகைக்கூத்தாவன அல்லியக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பாண்டரங்கம், மறக்கூத்து (மற்கூத்து),

கொடுகொட்டி, பாவக்கூத்து, கடையம். பேடு, துடி, மரக்கால் எனக்கொள்க என கூறப்படுகிறது..

“கடைமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமால் அல்லியமற் கும்பந்- துடியிடையீர்

(சுடர்விழியாய்)
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கங்
கொட்டிபதி னொன்றாங் கூத்து”

தொடர்ந்து வரும் உரையில் பதினொரு வகை கூத்திற்கும் உரிய கடவுளர்களின் பெயர்கள் கூறப்படுகிறது. அதிலிருந்து குடைக்கூத்து, துடிக்கூத்தும் முருகக்கடவுளால் ஆடப்பட்டது என அறிய முடிகிறது.

“எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும்- மண்ணின்மேற்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்
வாக்கினால் ஆடு அரங்கின் வந்து “

முன்னம் நூல்களில் கூறபட்ட ஆடல்கள் மாதவியால் ஆடப்பட்டுள்ளதாக சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் வெண்பாவில் பதிவாகியுள்ளது.

“மாயோன் பாணியும் வருணப் பூதர்
நால்வகப் பணியும் நலம் பெறு கொள்கை
வானூர் மதியமும் பாடிப் பின்னர்ச்
சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி யாடிய பாரதி அரங்கத்துத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட,,,,”

கடலாடு காதையில் பதினொருவகை கூத்துகள் ஆடப்பட்ட காரணங்கள் படிமுறையாக கூறப்பட்டுள்ளது. சூரபத்மனை வென்ற முருகன் ஆடிய கூத்து துடிக்கூத்து என்றும், அசுரர் முன் ஒரு முக எழினியாகத் தோன்றி தன்

குடையை சாய்த்துத் சாய்த்து ஆடியது குடைக்கூத்து என்றும் அறியக்கிடக்கிறது.

சில பரத சாஸ்திர நூல்களில் முருகக்கடவுளின் கலைகள் பற்றிய தகவல்களைக் காண முடிகிறது. பரத சேனாபதீயம் நூலில் இருந்து சில தகவல்கள் தரப்படுகிறது.

"அம்பிகை செய்தது
அம்பிகை யானை முகற்கறு முகற்கும்
அருளி னுபதெ சித்தனன் மாதோ."

பரத சேனாபதீயம் பாடல் 42 உமாமகேஸ்வரியானவள் தனது திருக்குமார்களாகிய கணபதிக்கும் சண்முகருக்கும் பரத நூலைக் கிருபையால் உபதேசித்தாள் என்று கூறப்பட்டுள்ளது. இதன்படி குருவிடம் சிஷ்யன் வித்தை கற்பது போல் முருகன் தம் தாயாரிடம், வித்தையினை கற்றது அறியப்படுகிறது.

"கந்தன் செய்தது
கந்த னால்வகைப் பால மூலிதப்
பிரபந்தங் கள்தன் பெயராற் செய்து
வாயு மதங்கற் குபதெ சித்தனன்
அவனனு மற்குமீ ரொன்பா னாகும்
சித்தர் தமக்குஞ் செப்பினன் றானெ."

பரத சேனாபதீயம் பாடல் 44 இல் சுப்பிரமணியன் சித்தஜம், காத்திரயம், வாகார்ம்பம், புத்தியாரம்பம் ஆகிய நால்வகைப் பாவமும், புத்தியாரம்பானுபவத்தில் மூவித பிரபந்தங்களும் விரித்து தம் பெயரால் நூல் செய்து, வாயுதேவர், மதங்க முனிவராதியாருக்கு உபதேசித்தனர். வாயுதேவன் தனது புத்திரன் அனுமானுக்கும் பதிணெண் சித்தருக்கும் உபதேசித்தான். என்று விளக்கம் தரப்பட்டுள்ளது. முருகன் தான் கற்றுகொண்ட வித்தையினை

விரித்துரைத்து உபதேசித்திருப்பதை நோக்கின் முருகக்கடவுள் இங்கு நாட்டிய கர்த்தாவாக பரிணாமிக்கிறார்.

மகாபரத சூடாமணி நூலிலும் சில செய்திகளை அறியக்கூடியதாக உள்ளது. மகாபரத சூடமணியின் குறிப்புரையில் உமை பரதத்தை முருகனுக்கு உபதேசிக்க அவரால் அது உலகெங்கும் பிரசித்தமாயிற்று என கூறப்பட்டுள்ளது. முருகனைக் குறித்த ஹஸ்தப் பிரயோகங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. சிவனது நெற்றியில் இருந்து வெளிப்பட்ட தீப்பிளம்பில் கங்கூலம் தரப்பட்டுள்ளது (மகா..பர.சூடா.282:1)

"இசை காங்கூ லஞ்ச னித்தது சிவனி டத்தில்...."

முருகனைக் குறித்து (மகா.பர.சூடா.727:1-2 )

"வலக் சிகர மற்ற வாமத்திற் றிரிசூ லந்தான் நிலைத்திரு கையு மேலாய் நீட்டின் முருக னாகும்..." என வருகிறது.

"தண்ணுமை மத்த ளந்துந் துபி தடா ரித்து டும்பு
கண்விடு தூம்பு தக்கை சல்லரி கம்ழு முல்லை
நண்ணிய பறையிவ் வொன்பா னாகுமத் திமமாய் வாத்தியம்
விண்ணாளு மகவான் கந்தன் முதலான தேவர்களுக்காம்"

மேல் வரும் (மகா.பர.சூடா.840 ) பாடலில் மத்திம வாத்தியங்கள் ஒன்பதும் கந்தன், இந்திரனுக்கும் உரியவை எனக் கூறப்படுகிறது. இவண்ணம் முருகனுக்கு பிரத்தியேகமான வாத்தியங்கள் இந் நூலில் கூறப்பட்டிருப்பதை நோக்கின் முருகனின் கலைச் சிறப்பினை அறிய முடிகிறது.

உலகிலே மிகப்பெரிய வடிவிலான சோமஸ்கந்தர் மூர்த்தம் உள்ள தலம் இலங்கையில் உள்ள திருக்கேதீஸ்வரம் ஆகும். கேது வழிபட்ட தலமாதலால் திருக்கேதீஸ்வரமாயிற்று என்பர். இது ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக ஆய்வாளர் கருதுகின்றனர். கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாராலும், சுந்தர மூர்த்தி நாயனாராலும் பதிகம் பாடப் பெற்ற திருத்தலமாகும். இங்கு சோமஸ்கந்தர் மூர்த்தத்தில் சிவனுக்கும் உமைக்கும் நடுவே கந்தன் நடனமாடிய நிலையிலுள்ளார். சோமஸ்கந்தர் மூர்த்தத்தில் நடனமாடும் கந்தன் எவ்விதம் அமைக்கப்பட வேண்டும் என்பதை

குறித்து ஆகம நூல்களும் சிற்ப சாஸ்திரங்களும் கூருகின்றன. சோமஸ்கந்தர் மூர்த்த அமைப்பின் மூலம், நடனத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முருகனின் சிறப்பு விளங்கிக் கொள்ள முடிகிறது.

புலவர் வில்லிபுத்தூரரால் எழுதப்பட்டது வில்லி பாரதமாகும். இவர் தென்னாற்காடு மாவட்டதில் உள்ள சனியூரில் பிறந்தவர். இவர் அருணகிரி நாதருடன் வாதங்களில் ஈடுபட்டார் என அறியக்கிடப்பதால், இவரது காலம் 15ம் நூற்றாண்டாகக் கொள்ளப்படுகிறது.
"கந்தனெனவெக் கலையும் வல்லஞானக்
கடவுண்முனிவிசலயனாலயமுங்..."

மேலே (பாடல்10:5) முருகக் கடவுளென்று சொல்லும்படி எல்லா வித்தைகளிலும் வல்லவனான பேரறிவு படைத்த தெய்வ விருடியாகிய விசாலயனென்ற முனிவனின் ஆலயம் என தமது விளக்க உரையில் வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் விளக்கம் தந்துள்ளார். இதில் இருந்து எல்லாக் கலையும் வல்ல ஞானக் கடவுள் முருகன் எனக் கொள்ள முடிகிறது.

பால தேவராய சுவாமிகளால் முருகன் மேல் இயற்றப்பட்ட பாடல்கள் கந்த சஷ்டி கவசமாகும். இவை 16ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக கருதுவர். பக்தர்களை சூழ உள்ள துன்பங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் கவசமாக இப்பாடல்கள் நம்பப்படுகிறது.
" சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிங்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனா "

" மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்"

மேலே(பாடல்1-5) (பாடல் 236) பாடல் வரிகளில் கால்களின் சலங்கையின் பாடலுக்கு ஏற்ப கிங்கிணி ஆட அழகிய (மயக்கம் தரவல்ல)நடனம் புரியும் மயிலை வாகனமாயுடையவன், என்றும் அடுத்து வரும் வரியில் முருகனின்

ஆடல் குறித்து மயிலுடன் நடனம் புரிபவனே என்று வருகிறது. இங்கு பாடல்கள், ஆடல்களுடன் முருகக்கடவுளை இணைத்துப் பாடல்வரிகள் அமையப் பெற்றிருப்பதைக் காணலாம்.

“ஓம்ஓம் நடனங்கொள் வேலா போற்றி“
“சங்கப் புலவனே போற்றி“
“ஓம் நாத விந்து கலாதீ போற்றி”

இவ்வண்ணம் அண்மைக்காலங்களில் அமைக்கப்பட்டுள்ள முருகனின் போற்றிப் பாடல்களிலும் முருகன் கலைகளுடன் இணக்கப்படுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

**அறிந்தவையும் அறியவேண்டியவையும்**

இலக்கிய நூல்களிலும் ஆய்வுக் கட்டுரைகளிலும் பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையிலே இவ் ஆய்வுக்கட்டுரையானது அமைந்துள்ளது. முருகக்கடவுளை கலைகளுடனும் இணைத்துப் பார்த்திருக்கும் தன்மையினை இலக்கியங்களில் இருந்து வெளிக் கொணர்வதாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது. தேவையினையொட்டி தகவல்களப் பெற்றுக்கொண்ட நூல்கள் பற்றிய விபரங்களும் எழுதப்பட்ட காலங்களையும் எழுதுவதன் மூலம் இக்கட்டுரையினை மேலும் அணி செய்யலாம் என நம்பிய போதும், தற்போதைய சூழ்நிலையும் கால அவகாசமும் அப்பணியினை செவ்வனெ செய்திட இடந்தரவில்லை. முடிந்தவரையிலான நூல்களின் தகவல்களும் காலங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மொழியின் பேச்சு வடிவமும் எழுத்து வடிவமும் இயலாகும், பண் இசைத்து பாடுவது இசையாகும். நடித்துக் காட்டுவது நாடகமாகும். `பரத சேனாபதீயம்` நூலின் கூற்றின்படி முருகன் (கந்தன்) தன் தாயிடம் பெற்ற நாட்டிய உபதேசத்தை விருத்தி செய்து தம் பெயரால் நூல் செய்து, வாயுதேவர், மதங்க முனிவராகியோருக்கு உபதேசித்தார். இங்கு முருகக்கடவுளின் இயலின் வித்துவத்தை காணமுடிகிறது. `திருமுருகாற்றுப்படை` இல் இசைக்க கருவிகளை உடையவனாக முருகன் பாடப் பெற்றிருக்கின்றார். தவிரவும்

பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை கீதம் பாட என `கந்தசஷ்டி கவசத்தில்` பாடப்பட்டிருக்கிறது. முருகக்கடவுள் இசையுடன் இணைந்திருப்பதைக் காணலாம். தந்தையாம் கூத்தபிரானைப்போல் தனையன் குமரன் ஆடிய கூத்துக்கள் பலவாம். குடைக்கூத்து, துடிக்கூத்து (பஞ்ச மரபு, சிலப்பதிகாரம்) குரவைக்கூத்து, வெறிக்கூத்து, வள்ளிக்கூத்து (சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம்) என்பன முருகக்கடவுளை சார்ந்த கூத்துகளாகும். இவை நோக்கின் முருகக்கடவுளின் நாடக வித்துவம் புலப்படுகிறது. முத்தமிழ் கலைகளின் வித்தகராக முருகக்கடவுள் தோற்றம் அளிக்கின்றார்.

முருகக்கடவுளை வீரத்திற்கும், காதலுக்கும், தமிழுக்கும் மாத்திரமல்லாது கலைகளுடனும் பொருந்திப்பார்க்கும் தன்மை புராணங்களிலும் இலக்கியங்களிலும் அன்று தொட்டு இன்று வரை வளர்ந்து வந்திருக்கிறது கண்கூடு, `தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு´ என்பதற்கு இணங்க விரிவான தேடுதல்கள் அவசியமாகும். ஆய்விற்கு உட்படுத்தப்படாத நூல்கள் எண்ணிலடங்கா, மேலும் சிற்பங்கள், கல்வெட்டுகள் போன்றவை நோக்கிய தேடுதல்கள் மூலம் காத்திரமான அருந்தகவல்களை வெளிக்கொணர வேண்டும். ஒரு விரிவான ஆய்விற்கு வழிகோலும் ஆரம்பப் புள்ளியாகவே இவ்வாய்வுக் கட்டுரையானது அமைந்துள்ளது

**உசாத் துணையாகப் பயன்பட்ட நூல்களின் தொகுப்பு**:


1. அறிவனார் இயற்றிய பஞ்சமரபு மூலமும் உரையும் - பதிப்பாசிரியர் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் 1975, சக்தி அறநிலைய வெளியீடு.

2. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரையும், அரும்பத உரையும் - உரை ந. மு. வேங்கடசாமி நாட்டரர். 1999 அப்பர் அச்சகம்.

3. மகா பரத சூடாமணி என்னும் பாவ ராக தாள சிங்காராதி - ரா. விசுவநாதையர் பதிப்பாசிரியர், 1994, டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல் நிலையம்.

4. திருமுருகாற்றுப்படை மூலமும் உரையும் - முனைவர். இரா. மோகன் உரையாசிரியர் 2004, நியூ செஞ்சரி புக் ஹவுஸ்

5. தேவாரத் திரட்டு பக்திப் பாமாலை - தொகுப்பு க.சச்சிதானந்தன்,வை.க. குமாரசுவாமி (இணுவையூர்க் குமரன்). திருவள்ளுவராண்டு 2036, சரஸ்வதி புத்தக நிலையம்.

6. புலவர், முனைவர், சே.இரகுராமன் - தமிழர் நடன வரலாறு, 2006, நந்தினி பதிப்பகம்

7. வில்லி பாரதம் மூலமும் உரையும் - ஸ்ரீ.உ.வே.சே. கிருஷ்ணமாசாரியர். 1959, டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல் நிலையம், www.tamilvu.org › library › html

8. பரத சேனாபதீயம் மூலமும் உரையும் குறிப்புரையுடன் - ஸ்ரீ.S.கலியாணசுந்தரையர். 1944, டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல் நிலையம்,

9. இல்லறத்தின் மேன்மையை பறைசாற்றும் சோமாஸ்கந்தர் கட்டுரை- தொகுப்பு: டி.எம். இரத்தினவேல். 6.3.2020 தினகரன்

10. கலை வரலாறு https://ta.wikipedia.org/s/362

11. தமிழர் ஓவியம் https://ta.wikipedia.org/s/g5w

12. கலை https://ta.wikipedia.org/wiki/%E0%AE%95%E0%AE%B2%E0%AF%88 19.07.2020

13. சிந்துவெளி நாகரிகம் https://ta.wikipedia.org/s/196

14. இந்தோனேசியக் குகை ஓவியங்கள் https://www.bbc.com/tamil/arts_and_culture/2014/10/141012_indonasian_cave_paintings 19.07.2020

15. கந்தபுராணம் http://www.tamilvu.org/library/l41e0/html/l41e0ind.htm 19.07.2020